# காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், வெள்ளப்புத்தூர் கிராமத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப அவர்கள் தலைமையில் மனுநீதி நாள் முகாம் நடைபெற்றது.

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், வெள்ளப்புத்தூர் கிராமம் மற்றும் அவற்றை உள்ளடக்கிய குக்கிராமங்களான கள்ளன்கொல்லை, சுக்கன்கொல்லை, அருந்ததிபர்ளையம், பாளக்காடு, ஆண்டிமேடு, இருளர்காலனி ஆகிய உள்ளிட்ட கிராமங்களை உள்ளடக்கிய மனுநீதி நாள் முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இம்முகாமில் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து தொலைத்தூரத்திலுள்ள கிராம மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் இது போன்ற மனுநீதி முகாகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இப்பகுதி மக்களிள் அடிப்படை வசதிகள் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் தேவையான அடிப்படை வசதிகள் உள்ளிட்ட பொது மக்களின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும். இம்மனு நீதி முகாம் தொடர்பாக 15 நாட்களுக்கு முன்னதாக பொது மக்களிடமிருந்து 80 மனுக்கள் பெறப்பட்டன. 23 மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டது. மீதம் மனுக்களுக்கு விரைந்து தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் சுகாதார வசதிகளை பொறுத்தமட்டிலும் இவ்வூராட்சியில் உள்ள 454 வீடுகளில் 424 தனிநபர் கழிப்பறைகள் கட்டப்பட்டன. மீதம் உள்ள 30 வீடுகளுக்கும் தனிநபர் கழிப்பறைகள் கட்டி முடிக்கப்படும். மேலும் திடக்கழிவு மேலாண்மை திட்டமும் இப்பகுதியில் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் தாய்த்திட்டத்தின்கீழ் 2016-2017 நிதியாண்டில் வேடந்தாங்கல் கள்ளன் கொள்ளைச்சாலை 32 லட்சத்திலும் வெள்ளை புதூர் காட்டுக்கொள்ளை சாலை 32.50 லட்சத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் விருப்ப நிதியிலிருந்து ரூ.48.45 இலட்சம் மதிப்பீட்டில் வெள்ளபுதூர் கட்டியந்தாங்கல் சாலைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் 8 மாணவ மாணவிகளுக்கு ரூ.15,500-க்கான கல்வித் உதவித்தொகை 21 நபர்களுக்கு முதியோர் மற்றும் விதவைத்தொகைக்கான ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார். மேலும் 14 நபர்களுக்கு பட்டா நகலும், மாற்றுத்திறனாளி நலத்துறை சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.25,000/- மதிப்புள்ள சிறப்பு மென்பொருளுடன் கூடிய கையடக்க கணிணி 2 மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கினார். தோட்டக்கலைத்துறை சார்பில் ஒரு பயனாளிக்கு ரூ.11,250/- மானியத்தில் பப்பாளி கன்றுகள் நடுவதற்கு வழங்கினார். வேளாண்மைத்துறை சார்பில் 15 நபர்களுக்கு தென்னங்கன்று

மற்றும் எல்மினிகிட் வழங்கினார். மேலும் பால் காளான் டேமோவிற்கு ரூ.4000/- மானியமும், சூரியமின் விளக்கு பொறிக்கு ரூ.4000 மானியம் வழங்கினார். மேலும் டெங்கு காய்ச்சல் கட்டுப்படுத்துவது தொடர்பாக வீடுகளில் தொன்னை சிரட்டை, பிளாஸ்டிக் கப், மற்றும் டயர் ஆகியவற்றில் அகற்றி ஏ.டி.எஸ் கொசு உற்பத்தி ஆகாமல் தடுக்கமாறு கிராம மக்களை கேட்டுக்கொண்டார்.

இம்முகாமில் சார் ஆட்சியர் கிள்ளி சந்திர சேகர், இ.ஆ.ப., மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.புகழேந்தி, தனித்துணை ஆட்சியர், (ச.பா.தி) திரு.சக்திவேல் அவர்கள் உள்ளிட்ட அனைத்து துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.